**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் - 2023**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1972 இன் 05 ஆம் இலக்க கமநல ஆராய்ச்சி பயிற்சி சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 பந்திக்கு முரணாக 2024 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,804,500 தொகை பெறுமதியான சொத்துக்கள் மற்றும் அதற்கான ரூபா 302,350 இற்கான பெறுமானத் தேய்வுச் செலவு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய கொள்வனவுகளை மாத்திரம் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | ரூபா 71,753,647 தொகைக்கான கிரயத்தை உடைய முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட 20 மோட்டார் வாகனங்கள் நிறுவனத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்ட போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 92(ஆ) பந்தியின் படி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். இந்த வருடத்தில் மதிப்பீட்டு வித்தியாசத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு இலக்கம் 11 இற்கு இணங்க மீளாய்வாண்டின் மானியங்களாக கிடைத்திருந்த ரூபா 4,298,900 தொகை மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கிடைத்திருந்த ரூபா 32,287,814 இற்கான மீதி வருவாய் என சீராக்கல் மேற்கொள்ளாமல் மூலதன ஒதுக்கம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத் துறை கணக்கீடு நியமம் 11 இன் 95 பந்தியின் படி மேலும் ஆய்வு செய்து தேவையான சீராக்கல் மேற்கொள்வேன். | நியமங்களுக்கு இணங்க மானியங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு தொழிற்பாடுகளின் கீழ் நிலையான சொத்துக்கள் தனதாக்கல் ரூபா 4,594,039 தொகை எனினும், ரூபா 4,135,240 தொகை என ரூபா 458,799 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியான பெறுமானங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறவேண்டிய மீதிகளின் வித்தியாசம் ரூபா 5,604,410 தொகை எனினும், ரூபா 782,510 தொகைக்கான ஐயக்கடன் ஒதுக்கம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீதிகளின் வித்தியாசம் கணிக்கப்பட்டு ரூபா 4,820,600 தொகை என காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தமையால் தொழிற்படு மூலதனம் ரூபா 782,510 தொகையினால் அதிகரித்திருந்தது. | எதிர்காலத்தல் கணக்காய்வினால் சுற்றிக்காட்டியுள்ளவாறு உரிய சீராக்கல்கள் மேற்கொள்வேன். | ஐயக்கடன் ஒதுக்கம் சீராக்கல் மேற்கொள்ள முன்னரான மீதிகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 136,687 தொகைக்கான நடைமுறை அல்லாத சொத்தொன்று இயந்திர உபகரண திருத்தச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். சரி செய்வதற்கு நவடக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடைமுறை அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்தல் சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 பெப்ரவரி 07 திகதி முதல் 2022 நவம்பர் வரை நெல் சந்தைப்படுத்தல் சபையின் உபதலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த இந்த நிறுவகத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தருக்காக மேற்கூறிய காலப் பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகள் ரூபா 4,256,574 தொகை நெல் சந்தைபடுத்தும் சபையிலிருந்து கிடைக்க வேண்டிய தொகையொன்றென நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற ஆளுகை சபை கூட்டத்தில் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் படி அந்த உத்தியோகத்தர் 50 சதவீதம் மற்றும் 90 சதவீதம் 2020/02/07 திகதி முதல் 2022/11/20 வரை சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 2022/11/21 திகதி முதல் 2023/11/30 திகதி வரை முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. மீளளிப்பு செய்யப்படாத காலப் பகுதிக்காக அமைச்சுக் கணக்காய்வுக் குழுவின் அறிவுரையின் படி மீளளிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 27,607,208 தொகைக்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், ரூபா 34,413,533 தொகைக்கான கணினி உபகரணங்கள் மற்றும் ரூபா 49,701,404 தொகைக்கான | காணப்படுகின்ற விரவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன், இவ்வாண்டில் இந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து மீள்மதிப்பீட்டுப் பெறுமதி | நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்துவதற்காக விரிவான அட்டவணைகள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்களுக்கான விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்பட்டு அட்டவணைகள் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆகஸ்ட் மாதம் நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,272,016 இற்கான தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | 2021 ஆகஸ்ட் 23 திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பதவிக்காக நிறுவனத்தை விட்டுச் சென்றிருந்த திரு. ஈ.ஏ.சீ. பிரியங்கர அவர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,272,016 இற்கான தொகையை பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக வழக்கு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வழக்குக்கு உரிய ஆவணங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட உத்தியோகத்தரிடம் நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 17,965,464 தொகைக்கான வெளிநாட்டு புலமைப்பரிசில் கடன்பட்டோர் மீதியின் ரூபா 12,693,448 இற்கான தொகை மற்றும் ரூபா 24,387,625 தொகைக்கான ஏனைய கடன்பட்டோர் மீதியில் ரூபா 2,192,602 இற்கான மீதியொன்று 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் ரூபா 28,959,096 தொகைக்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ரூபா 2,365,048 இற்கான மீதியொன்று 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2002 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் மீதியொன்றாகிய ரூபா 12,693,448 இற்கான தொகை வெளிநாட்டு புலமைப்பரிசில் கடன்பட்டோர் 6 பேரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அவர்களின் மூவரின் வழக்கு அலுவல்கள் முடிவடைந்திருப்பதுடன் வழக்குத் தீர்ப்பின் படி நிறுவகத்திற்கு குறிப்பிட்ட பணத்தை செலுத்துமாறு புலமைப்பரிசில் கடன்பட்டோருக்கு விதிக்கப்பட்டிருந்தது. அதற்காக தேவையான இணக்கப்பாடொன்று அல்லது ஆதனங்களின் மூலம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மீதியான மூவரின் வெளிநாட்டு விலாசங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதனால் வழக்கை தொடர்ந்து நடாத்திச் | வழக்குத் தீர்ப்பின் படி கடன்தொகை அறவீடு செய்யப்பட வேண்டியதுடன் மீதிக் கடன்தொகையை விரைவாக தீர்த்துக் கொள்ள வேண்டும். |

செல்ல முடியாமல் உள்ளது. எவ்வாறாயினும் இந்த மூவரின் உறவினர்கள் மூலமாக புலமைப்பரிசில் கடன்பட்டோர்கள் தொடர்பு கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 104(2)(ஆ) | 2011 ஆண்டின் போது ரூபா 1,067,150 தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட உயிர்வாயு செயற்திட்டம் 2016 ஆண்டு முதல் செயற்படாது இருந்ததுடன் 2022 ஜுன் 23 திகதி சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையின் படி முன்னைய பணிப்பாளரினால் டென்டர் நடைமுறைக்கு முரணாக அந்த செயற்திட்டத்திற்கு தேவையான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்து பொறுத்துதல் ஏனைய உத்திகோத்தர்களையும் இணைத்துக் கொண்டு அதன் செயற்பாட்டை பாதிக்கக் கூடிய விதமாக செயற்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் ஏற்பட்டிருந்த அந் நட்டங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உயிர்வாயு செயற்திட்டம் தொடர்பாக நி.பி.104 விசாரணை மேற்கொண்டிருந்ததுடன் அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தில் சமர்ப்பித்து தொடர் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்படும். | நி.பி. விசாரணையின் படி ஏற்பட்டிருந்த அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் IX பிரிவு 2.2 | அரச ஊழியர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சியை பயன்படுத்தி அலுவலக நேரத்தில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்காக உத்தியோகத்தருக்கு தனிப்பட்ட முறையில் செலுத்தப்படும் கட்டணத்திற்காக 25 சதவீதம் ஒன்றித்த நிதியத்திற்கு | செயற்திட்டத்தின் மதிப்பீட்டு பாதீடு ஆளுகைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. அந்த மதிப்பீட்டு பாதீட்டில் ஆய்வுகளுக்கான செலவுகளில் 7-15 சதவீதம் வரையான பெறுமதி ஒன்று நிர்வாகச் செலவொன்று என | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி தனிப்பட்ட வகையில் வழங்கப்படும் கட்டணங்களுக்காக 25 சதவீதம் ஒன்றித்த நிதியத்திற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 முதல் 2022 வரை நிறுவகத்தின் 38 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,707,770 இற்கான படி ஒன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக அரச பங்களிப்பான ரூபா 926,943 தொகை கழித்து ஒன்றித்த நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. | உட்படுத்தப்படுகின்றது. இந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நீதித் தொகை ஒன்று காணப்படின் அந்த மீதித் தொகை அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இற்கு இணங்க வினியோகத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த மீதியை வினியோகிக்கும் போது அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் பகுதி II பந்தி 7.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு ஆளுகை சபையின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இங்கு குறிப்பிட்ட நேர் மற்றும் மறை பங்களிப்பு வழங்கிய ஊழியர்களுக்கு 75 சதவீதமும் மீண்டும் மேலதிகச் செலவிற்காக 5 சதவீதமும் நிறுவனத்தின் பங்களிப்பு 20 சதவீதம் என மீதியை வினியோகித்தல் பங்கீடு செய்தல். | செலவு வைக்கப்பட வேண்டும் |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XIX பிரிவு 6.3 | பதிவாளரினால் தாபனக் கோவைக்கு முரணாக தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் அறை தனியார் தரப்பினருக்கு வழங்கியிடுதல் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அவர்களின் பரிந்துரையின் படி செயற்பட வேண்டும் என நிதிப் பிரமாணம் 104 விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | அமைச்சுச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு வழங்கியுள்ள அறிவுரையின் படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் மீண்டும் அந்த சம்பவம் தொடர்பாக ஆளுகை சபைக்கு சமர்ப்பித்தல் தேவைப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று நடவடிக்கையை செயற்படுத்தி அவரின் தனிப்பட்ட கோவைக்கு உட்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2022 ஜனவரி 25 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2022 | 2022 ஆண்டில் வருடாந்த கணிப்பீட்டு அறிக்கையின் படி இலக்கம் 141-5655, 141-5672 மற்றும் 141-5646 கொண்ட வாகனங்களை | மோட்டார் சைக்கிள்கள் அப்புறப்படுத்துவதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் | அப்புறப்படுத்தல் மற்றும் திருத்த வேலை அலுவல்கள் விரைவாக |

| | | |
|---|---|---|
| அப்புறப்படுத்துவதற்கு தீர்மானித்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் அப்புறப்படுத்தும் அலுவல்கள் மேற்கொண்டு இருக்காததுடன் 5 வருடத்தை விட மிகையான காலம் முதல் ஓட்ட நிலையிலிருந்த அகற்றப்பட்டு இருந்து இலக்கம் 32-4670 மற்றும் 30-4342 கொண்ட 02 ஜீப் வண்டிகள் திருத்த வேலை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் திருத்த வேலை மேற்கொண்டு பயன்தரு வகையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>இலக்கம் 32-4670 மற்றும் 30-4342 ஜீப் வண்டிகள் திருத்த வேலை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும் போதியளவு நிதி ஏற்பாடுகள் இன்மையால் திருத்த வேலை மேற்கொள்ளல் தாமதமாகியது. பெற்றுக் கொள்ளக் கூடிய ஏற்பாடுகள் மீது திருத்த வேலை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் நிருவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 16,128,359 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,391,622 தொகையாக ககாணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 10,736,737 இற்கான மிகையில் அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 29,141,960 இனால் அதிகரித்தல் மற்றும் ஊழியர் உழைப்புச் செலவு ரூபா 18,308,563 இனால் குறைவடைதல் இந்த நிதி விளைவுகளில் அதிகரிப்பு மீது பிரதானமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நடைமுறை விகிதாசாரம் 2.26 சதவீதத்தினால் குறைவடைதல் மற்றும் திடீர் சொத்து விகிதாசாரம் 0.24 சதவீதத்தினால் அதிகரித்தல் நேரிட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உலக உணவு அமைப்பின் நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த 40-3933 இலக்கங் கொண்ட லொறி வண்டியினை கணக்காய்வுத் திகதியாகிய 2023 திசெம்பர் 31 திகதி வரையும் நிருவகத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உலக உணவுத் திணைக்களத்திற்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனத்தினால் லொறி வண்டியை உரித்தாக்களுக்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகனத்தை உரித்தாக்கும் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 பெப்ரவரி 07 திகதி முதல் 2022 நவம்பர் வரை நெல் சந்தை படுத்தும் சபையின் உபதலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த இந்த நிறுவகத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தருக்காக மேற்கூறிய காலப் பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகள் ரூபா 4,256,574 தொகை நெல் சந்தைபடுத்தும் சபையிலிருந்து கிடைக்க வேண்டிய தொகையொன்றென நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற ஆளுகை சபை கூட்டத்தில் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் படி அந்த உத்தியோகத்தர் 50 சதவீதம் மற்றும் 90 சதவீதம் 2020/02/07 திகதி முதல் 2022/11/20 வரை சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 2022/11/21 திகதி முதல் 2023/11/30 திகதி வரை முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. மீளளிப்பு செய்யப்படாத காலப் பகுதிக்காக அமைச்சுக் கணக்காய்வுக் குழுவின் அறிவுரையின் படி மீளளிப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 மே 02 திகதி பிரதான புத்தக களஞ்சியத்தில் அப்புறப்படுத்தப்பட வேண்டிய புத்தகங்களை இனங்காண்பதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் அறிக்கையின் படி ரூபா 2,191,598 தொகை பெறுமதியான 12,475 புத்தகங்கள் அகற்றப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் இந்த புத்தகங்கள் இளையானினால் அரிக்கப்பட்டு உக்கக் கூடிய நிலையில் காணப்பட்டது. | குறிப்பிட்ட குழு அறிக்கை கிடைத்தவுடன் ஆளுகை சபைக்கு அதன் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அப்புறப்படுத்தல் சபையின் தீர்மானம் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |